ஞளுபிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
13 07 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. புராதன நினைவுச் சின்னங்கள் யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் இடம்பெற்றுள்ளது, நாட்டின் பாரம்பரியத்திற்கு கிடைத்த பெருமை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. இந்திய மருத்துவ முறைகளுடன் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் இந்தியா மேற்கொண்டு வரும் முன்முயற்சிகளுக்கு உலக சுகாதார அமைப்பு அங்கீகாரம் அளித்துள்ளது.
3. தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக மாநில அரசு எவ்வித திட்டத்தையும் செயல்படுத்தவில்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
4. எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 7 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.
5. ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா 2 தங்கம் உட்பட 5 பதக்கங்களை வென்றுள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

<<<>>>>

மகாராஷ்டிரா மற்றும் தமிழகத்தில் உள்ள புராதன நினைவுச் சின்னங்கள் யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது, நாட்டின் பாரம்பரிய சின்னங்களுக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்தப் புராதன சின்னங்களின் கட்டமைப்பு, புவிசார் மற்றும் பாதுகாப்பு திட்டமிடல் குறித்த புரிதலை பிரதிபலிப்பதாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

எந்தவொரு அநீதிக்கும் எதிரான நடவடிக்கைகள் மூலம் சிறந்த நிர்வாகத்தை பின்பற்றும் ஆட்சியாளர்கள், மக்களிடம் உத்வேகத்தை ஏற்படுத்துகிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் புராதன சின்னங்களைப் பார்வையிடவும், மராட்டியப் பேரரசின் வளமான வரலாற்றை அறிந்துகொள்ளவும் மக்கள் முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் இடம்பெற்றுள்ள மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த 11 இடங்களும், தமிழகத்தைச் சேர்ந்த செஞ்சிக் கோட்டையும் இடம்பெற்றுள்ளதற்கு மத்திய அமைச்சர்கள்...

... திரு. பியூஷ் கோயல், திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், டாக்டர் எல். முருகன், மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<>>>>

பாரம்பரிய மருத்துவ முறைகளுடன் குறிப்பாக ஆயுஷ் மருத்துவத்துடன் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் இந்தியா மேற்கொண்டு வரும் முன்முயற்சிகளுக்கு உலக சுகாதார அமைப்பு அங்கீகாரம் அளித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக சுகாதார அமைப்பின் இந்த அங்கீகாரம், நாட்டின் பழமையான மருத்துவ முறைகளுக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் மூலம் பாரம்பரிய மருத்துவ முறைகளை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் நிலைப்பாட்டை இது பிரதிபலிப்பதாக உள்ளது என்று அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

பண்டையகால நோய் கண்டறிதல் முறைகளை நவீன தொழில்நுட்பங்களுடன் இணைத்து ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி போன்ற மருத்துவ முறைகளில் நவீன தொழில்நுட்பக் கருவிகளை உருவாக்குவதற்கான முன்முயற்சிகள் இதில் அடங்கும்.

<<<>>>

தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக மாநில அரசு எவ்வித திட்டத்தையும் செயல்படுத்தவில்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சமூகநீதி என்ற பெயரில் நடத்தப்படும் விடுதிகளல் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லை என்று அவர் குறை கூறினார்.

<<<>>>

நிதி நிறுவன மோசடியில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் குண்டர் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இது தொடர்பான வழக்கு விசாரணையின்போது ஆஜரான தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த சட்ட திருத்தத்தின் மூலம் எதிர்காலத்தில் நிதி மோசடிகளை தவிர்க்க முடியும் என்றும், மோசடியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறை கண்காணிப்பாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<>>>

எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 7 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை – காங்கேசன்துறை கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்ததாக அவர்கள் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறைமுக கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மீனவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<>>>

விதைப் பந்துகளுடன் சேலத்தில் பள்ளி மாணவர்கள் மேற்கொண்ட இயற்கையை நோக்கிய பயணம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இளைஞர்களிடையே இயற்கையின் மீதான ஆர்வம் நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கு வித்திடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில இடங்களில் இன்று முதல் 6 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே இன்றும் நாளையும் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைக் காட்டிலும் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

<u>இருவரிச் செய்திகள்</u>

மெக்சிகோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 30 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

-----------

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர்.

-----------

இந்தியாவின் நிதியுதவிடன் இலங்கை அனுராதாபுரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வீடுகளை, அந்நாட்டுப் பிரதமர் டாக்டர் ஹரினி அமரசூர்யா மற்றும் இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஜா இணைந்து பயனாளிகளிடம் ஒப்படைக்கின்றனர்.

-----------

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தனியார் கட்டுமான நிறுவனத்திற்கு சொந்தமான 762 கோடி ரூபாய் மதிப்பிலான அசையா சொத்துக்களை அமலாக்கத்துறை பறிமுதல் செய்துள்ளது.

-----------

தெலங்கானா மாநிலத்தில் நக்சலைட் அமைப்பைச் சேர்ந்த 6 பேர் காவல்துறையினரிடம் சரணடைந்துள்ளனர்.

-----------

சென்னை அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் தொடங்கி வைத்தார்.

-----------

முறையான ஆவணங்கள் இன்றி கொண்டு சென்ற ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த நபரிடம் இருந்து ஒரு கோடியே 14 லட்ச ரூபாய் ரொக்கப் பணத்தை திருச்சி வருமான வரித்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

-----------

விழுப்புரம் மாவட்டத்தில் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 10 ரூபாய் உயர்த்தி வழங்க வேண்டும் என்று மாநில அரசை வலியுறுத்தி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

-----------

மயிலாடுதுறை மாவட்டத்தில் பல்வேறு அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அரசு சுற்றுலா மாளிகையை மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் திறந்து வைத்தார்.

-----------

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

கிர்கிஸ்தானின் **Bishkek-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 57 கிலோ எடைப் பிரிவில் அங்குஷ் மற்றும் 79 கிலோ எடைப்பிரிவில் அமித் தங்கப் பதக்கம் வென்றனர்.

65 கிலோ எடைப்பிரிவில் அஷ்வனி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

70 கிலோ எடைப்பிரிவில் சௌரவும், 97 கிலோ எடைப்பிரிவில் விஷாலும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

---------------

உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா மேலும் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

மேட்ரிடில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிவில் ஜோதி சுரேகா வெண்ணம் இப்பதக்கதைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3வது நாளான நேற்று இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 2 ரன் எடுத்துள்ளது.
லார்ட்சில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 387 ரன் எடுத்துள்ளது. கே.எல். ராகுல் சதமடித்தார்.
இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 387 ரன் எடுத்துள்ளது.

**<<<<The End>>>>**